முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1390

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.07.2023, வியாழக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்கவாழ்க
   ஓங்காரக்குடில் படைத்த தேசிகா வாழ்கவாழ்க
   ஓங்காரன் சுப்ரமணியர் யானும்
   ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது நள்ளித்திங்கள்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 04 ம் நாள், 20.07.2023, வியாழக்கிழமை)
   அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
   வாசிவென்ற ஞான கூட்டங்கள் எல்லாம்
   வணங்கி அரங்கன் குடிலில் அலங்கரிக்க
3. அலங்கரிக்க அரங்கனை நோக்கி வரும் அனைவருக்கும்
   அவரவர்க்கும் பிறவித்தொடர்புள்ள ஆற்றல்மிக்க ஞானிகளின் ஆசி கிட்டி
   பெருமைபட அவரவரும் வருங்காலம்
   பிசகின்றி பிரணவ சக்தி மூலம்
4. மூலமாக உயர் ஞானிகளாக
   முழுமைதனை அடைவது உறுதிஉறுதி
   உறுதி தந்து அரங்கனுள் யானிருந்து
   உலகோர்க்கு தீட்சையாக இறங்கி அருள
5. அருளவே அரங்கன் திருவடி பற்றி
   ஆசிதீட்சை பெற்ற மக்களெல்லாம்
   இருள் என்கின்ற பிறவிபிணித் துன்பத்தில்
   இருந்து முழுமைபட விலகி இனி
6. பிறவாத பெரும்பேற்றை அடையக்கூடும்
   இந்த அற்புதத்தை அரங்கன் கொண்டு யான்
   வருமுலகில் உலகமெல்லாம் நடத்தி வர
   வணங்கி வந்தால் வையகமே பெரும் மாற்றம் காணும்

7. காணவே அற்புதத்தை கலியில்
கணக்காய் அரங்கன் வழி நடத்தி வருகின்றேன்
ஞானம் உறுதிகொண்டு அடைந்து சிறக்க
நம்பிக்கைகொண்ட மக்களெல்லாம்

8. எல்லோரும் பிரணவக்குடில் நோக்கி
இனிதே தேடிவந்து அரங்கன் பதம்
வல்லமைபட சரணடைந்தால் போதும்
வையகத்தில் பெருமாற்றம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–